# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.298/2024 நாள்.16.04.2026

PW1- திரு.செந்தில்கண்ணன் த/பெ. திரு.ராமலிங்கம்

1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

சசிகண்ணன் என் தம்பியா என்றால் இளையசகோதரர். என் அப்பா விவசாயியா என்றால் இல்லை வங்கியில் வேலை பார்த்து ஒய்வு பெற்றார். மேலாளரா என்றால் ஒய்வு பெறும்போது உதவி மேலாளர். எந்த வங்கியில் வேலை பார்த்தார் என்றால் ஒய்வு பெறும்போது இந்தியன் வங்கி. நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளோமா இன் கம்யூட்டர் சைன்ஸ். என் தம்பி என்ன படித்துள்ளார் என்றால் பட்டபடிப்பு கம்யூட்டர் சைன்ஸ். எனக்கு திருமணம் பண்ணி வைத்தாரா என்றால் பண்ணிவைத்தார். என் மனைவி வேலை பார்த்தாரா என்றால் பார்த்தார். என்ன வேலை என்றால் வங்கியில் காசாளராக பணியாற்றினார். என் தம்பிக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளது என்றால் ஆமாம். நான் திருமணத்திற்கு பிறகு தொழில் செய்தேனா என்றால் தொழில் செய்தேன். என்ன தொழில் என்றால் செங்கல் சூளை அதன்பிறகு இருசக்கர வாகனம் உதிரிபாகங்கள் விற்பனை கடை. என் தம்பி எதுவும் தொழில் செய்தாரா என்றால் TVS இருசக்கர வாகன சப்டீலராக இருந்தார். தற்சமயம் என்ன செய்கிறார் என்றால் தெரியவில்லை. தற்போது பாரத் பெட்ரோல் நிறுவன சில்லறை விற்பனை நிலையம் வைத்துள்ளார் என்றால் தெரியவில்லை. இருசக்கர வாகனம் உதிரி பாக கடைக்கு கடன் வாங்கினேனா என்றால் வாங்கினேன். எந்த வங்கியில் என்றால் லட்சுமி விலாஸ் வங்கி. அதற்கு என் தந்தை பிணையதாரராக இருந்தாரா என்றால் ஆமாம். நான் அந்த நிறுவனத்தை நஷ்டத்தின் காரணமாக நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல என் தாய் இறந்துவிட்ட காரணத்தினால் தொழில் நடத்தவிடாமல் நான் கடை வைத்திருந்த இடத்தை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார்கள். யார் விற்றார், யார் பெயரில் சொத்து இருந்தது என்றால் 1ஆம் பிரதிவாதி பெயரில் இருந்தது அவர் விற்றார். நான் கடன் கட்ட முடியாமல் இருந்தபோது என் இளையசகோதரர் என் கடன் தொகையை கட்டி கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. எனக்கு தற்போது வயது என்ன என்றால் 52. என் தம்பி எப்போது பிறந்தார் என்றால் எனக்கு 1 1/2 வயது இருக்கும்போது பிறந்தார். இளவர் நிலையில் சொத்து வாங்கியதாக சொல்லுகிறேனே அது எந்த ஆண்டு வாங்கபட்டது என்றால் நான் வெளியிலேயே வேலை செய்ததால் எனக்கு தெரியாது. உப்புகாச்சி புல எண் 89/2 புஞ்சை நிலம் 250 குழி 1ஆம் பிரதிவாதி மேஜரானபிறகு அவர் வாங்கியது என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்க கடனை அடைத்தபோது எனக்கும், என்

சகோதரர்களுக்கும் நிலங்கள் பதிவு செய்து கொடுக்கபட்டது என்றால் ஆமாம் தவறுதலாக செய்யபட்டது. 73/2 சொத்து பொதுபணத்திலிருந்து வாங்கபட்டது என்றால் தவறு. 73/2 சொத்தை தாவாவில் நான் சேர்க்கவில்லை என்றால் அது என் மனைவி மூலமாக எனக்கு சீதனமாக வந்த சொத்து. என் பெயரில் வாங்கிய சொத்து தாவாவில் சேர்க்கவில்லை என்றும் தம்பி பெயரில் வாங்கிய சொத்தை அப்பா வாங்கியது என்று சொல்லி தாவாவில் சேர்த்துள்ளேன் என்றால் பொய். காலவாய் போட யார் பணம் கொடுத்தது என்றால் என் மனைவி பணியிலிருந்து வந்த என் பணம். என் அப்பா 5லட்சம் பணம் அவருடைய சொந்த கணக்கிலிருந்து காலவாய் பணம் கொடுத்தார் என்றும் நான் அதையும் தொழில் செய்வதாக அழித்துவிட்டேன் என்றும் சொன்னால் பொய். துரைசந்திரசேகரன் பெரியப்பா சந்தானம் என்பரிடமிருந்து நான் 3லட்சம் கடன் வாங்கினேன் என்றும் அதையும் என் அப்பா தான் அடைத்தார் என்றும் சொன்னால் எனக்கு அப்படி யாரையும் தெரியாது. கல்யாணபுரம் திவாகர் என்பரிடம் நான் சீட்டு எடுத்து பணம் கட்டவில்லை என்றும் அதையும் என் அப்பாவும் தம்பியும் அடைத்தார்கள் என்றால் திவாகர் என்று எனக்கு யாரையும் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் முத்துகுமார் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். மேற்கண்ட ஆவணத்தின் மூலம் நான் ரூ.3,00,000 வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. அதை 1ஆம் பிரதிவாதிதான் மீட்டார் என்றால் சரியல்ல. மீண்டும் 16.3.2023இல் அவ்வாறு அடமானம் வைத்தேன் என்றால் சரியல்ல. லட்சுமி விலாஸ் வங்கியில் நான் ஸ்பர்பாட்ஸ் கடைக்கு வாங்கிய கடனை 1ஆம் பிரதிவாதி அவருடைய தனிபட்டகணக்கிலிருந்து அடைத்ததால் ஆவணங்களை அவரிடம் கொடுத்துள்ளார்கள் என்றால் பொய். என் அப்பா என்னுடன் எவ்வளவு நாள் இருந்தார் என்றால் அவர் சாகும்வரை என் வீட்டிலும், 1ஆம் பிரதிவாதி வீட்டிலும் மாறிமாறி இருப்பார். என் மனைவி மீனாவுடன் மனவேறுபாட்டினால் பிரிந்து வாழ்ந்தேன் என்றால் ஆமாம் என் மனைவி மீனா எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றால் இல்லை. என் மனைவி இருக்கும்போதே நான் வேறு ஒருவரை திருமணம் செய்தகொண்டதாக என் மீது திருவையாறு காவல்நிலையத்தில் வழக்கு பதியபட்டு வழக்கு நடந்துவருகிறது என்றால் ஆமாம். என் தந்தையார் மீதும் தம்பி மீதும் அந்த வழக்கு உள்ளது என்றால் ஆமாம். என் தம்பியிடம் என் அப்பா இருந்தாரா என்றால் அம்மா இறந்தவுடன் இரண்டு ஆண்டுகள் அவர் வீட்டில் இருந்தார். 1ஆம் பிரதிவாதி என் அப்பாவுடன் இருந்தபோது பண்ட பாத்திரங்களை எடுத்துபோனார் என்றும் எனக்குரியதை பிரித்து கொடுங்கள் என்று அப்பாவிடம் கேட்டேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் இதற்கு முன்பாகவே வீட்டு

பொருட்கள் எல்லாவற்றையும் முடித்துவிட்டேன் என்றும் பிரித்து கொடுக்க எதுவுமில்லை என்றால் சரியல்ல. என் தம்பி TVS கம்பெனியில் மிகபெரிய டீலர் என்றும் நிறைய சம்பாதித்தார் என்றும், பெட்ரோல் பங்க் நடத்தி வந்தும் அந்த வருமானத்தின் மூலம் அவர் பெயரில் சொத்து வாங்கியுள்ளார் என்றும் அந்த சொத்துக்களையும் என்னுடையது என்று சொல்லி இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா இருக்கும் காலத்திலேயே ஊரில் உள்ள வீட்டை நீ வைத்துகொள், டவுனில் உள்ள வீட்டை அவன் வைத்து கொள்ளட்டும் என்று வாய்மொழியாக பிரித்துவிட்டார் என்றால் ஆமாம். 3லட்சம் பணம் நான் திண்டுக்கல்லை சேர்ந்த எனது பெரியம்மா மகள் அக்காவிற்கு கொடுக்கவேண்டியிருந்தது என்றும் அவர்கள் வந்து கேட்டார்கள் என்றும் நான் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் நான் பணம் வாங்கவில்லை, 1ஆம் பிரதிவாதி வாங்கிய கடனை கேட்க அவர்வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்னை பார்த்து அவர்கள் வீட்டிற்கு வரச்சொன்னதால் நான் போனேன். நான் அவர்கள் காரை வாங்கி அடகு வைத்துவிட்டேன் என்றும் அது விபத்தாகிவிட்டது என்றும் அதனால் 1ஆம் பிரதிவாதியிடம் 3லட்சம் பணம் வாங்கி கொண்டு போய்விட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அதற்கு புரோநோட் செக் ஆவணங்களை 1ஆம் பிரதிவாதியிடம் அவர்கள் கொடுத்துவிட்டார்கள் என்றால் பொய்யான தகவல். என் தம்பியின் திருமணத்திற்கு முந்தைய நாளில் 1ஆம் பிரதிவாதி கொடுத்த காரை திருவாரூர் விபத்து ஏற்படுத்தினேன் என்றால் அவரிடம் அப்போது காரே இல்லை. கோவில் நிலத்தை கேட்கிறேனே 1ஆம் பிரதிவாதி சேவை செய்ததால் சன்னிதானம் அவருக்கு கொடுத்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிராது தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றும், 1ஆம் பிரதிவாதி பெயரிலுள்ள போட்டி, பொறாமையின் காரணமாக இவ்வாறு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பாகம் கோர உரிமையற்றவர் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவும் 1ஆம் பிரதிவாதியும் சேர்ந்து ரெப்கோ வங்கி, எஸ்பிஐ வங்கியில் கடன் வாங்கியுள்ளார்கள் என்றால் என் அப்பா 1ஆம் பிரதிவாதியுடன் இருந்ததால் கையெழுத்து போட்டுள்ளார் 1ஆம் பிரதிவாதிதான் கடன் வாங்கியுள்ளார். என் அப்பா வாங்கிய கடனை நான் அடைக்க கடமைபட்டவர் என்று சொன்னால் என் அப்பா வாங்கியது உண்மையென்றால் அதை அடைக்க கடமைபட்டவன் என் அப்பா அவ்வாறு வாங்கவில்லை. 1ஆம் பிரதிவாதி என் அப்பா சொன்னதுபோல்

உப்புகாச்சிபேட்டையிலுள்ள பூர்விக வீட்டில் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை என்று சொன்னால் பொய். உண்மைகளை மறைத்து எல்லா சொத்துக்களையும் சேர்க்காமல் இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றும் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் அப்பா ராமலிங்கம் வங்கியில் அதிகாரியாக இருந்தார் என்றால் ஆமாம். அவர் வாங்கிய தனிபட்ட சொத்தை 4வது அயிட்டமாக பிராதில் சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த சொத்தை ரெப்கோ வங்கியில் கேரண்டியாக கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அது என் தம்பி வாங்கிய கடனுக்காக கேரண்டி போட்டுள்ளாரா என்றால் ஆமாம். என் அப்பா இறந்துவிட்டார் என்றால் ஆமாம். கடனை திரும்ப கட்டாததால் அந்த சொத்தை பொறுத்து சுவாதீனம் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த சொத்திலும் பங்கு கேட்கிறேன் என்றால் ஆமாம். என் அப்பா இறந்துவிட்டதால் சுவாதீன நடவடிக்கை நோட்டீஸ் எனக்கு வந்ததா என்றால் வந்தது. நான் பாதி கடனை கட்ட தயாராக இருக்கிறேன் என்றால் இல்லை.

2, 5, பிரதிவாதி குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.16 18:10:29 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**